செ.வெ.எண்: 19
நாள்: 11.03.2019

# மக்களவைக்கான பொதுத் தேர்தல்கள் 2019

மக்களவைக்கான பொதுத் தேர்தல்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி நடைபெறவுள்ளன:

| | |
|---|---|
| வேட்பு மனு தாக்கல் : | 19.03.2019 (செவ்வாய்க் கிழமை) |
| வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு கடைசி நாள்: | 26.03.2019 (செவ்வாய்க் கிழமை) |
| வேட்பு மனு பரிசீலணை : | 27.03.2019 (புதன்கிழமை) |
| வேட்பு மனு மீளப் பெறுவதற்கு கடைசி நாள்: | 29.03.2019 (வெள்ளிக் கிழமை) |
| வாக்குப் பதிவு நாள்: | 18.04.2019 (வியாழக்கிழமை) |
| வாக்கு எண்ணிக்கை நாள்: | 23.05.2019 (வியாழக்கிழமை) |

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 28,61,961<br>ஆண்கள்: 1417683<br>பெண்கள்: 1443967 |
| மொத்த வாக்குச் சாவடி மையங்கள் | 3072 |
| வாக்கு எண்ணும் மையங்கள் | 2 |
| பதட்டமான வாக்குச் சாவடிகள் | 470 |

- சட்டமன்றத் தொகுதி வாரியாக ஒவ்வொரு தொகுதிக்கும் பறக்கும் படை குழுக்கள் 3, நிலையான கண்காணிப்புக் குழுக்கள் 3, வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் 1, செலவின கணக்குக் குழு 1, வீடியோ பார்வையிடும் குழு 1 ஆக மொத்தம் 9 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் 90 குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்படும். தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டு உள்ளதால் ரூ.50000/- க்கு மேல் பணமாக கொண்டு செல்லும், வேட்பாளரது அல்லது முகவரது அல்லது கட்சி உறுப்பினரது வாகனம் மற்றும் தொகை பறிமுதல் செய்யப்படும். மேலும் ரூ 10000/- க்கு மேல் போஸ்டர்கள், தேர்தல் தளவாடங்கள், மது பானங்கள், போதை பொருட்கள் கொண்டு செல்லும் வாகனங்கள் அத்தகைய பொருட்களுடன் பறிமுதல் செய்யப்படும்.

- தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டு உள்ளதால் மாநகர மற்றும் நகரப் பகுதிகளில் பொது கட்டிடங்கள், சுவர்கள் ஆகியவற்றில் உள்ள அரசியல் விளம்பரங்கள் மற்றும் போஸ்டர்கள் 24 மணி நேரத்திற்குள் அகற்றப்படும்.

- தேர்தல் நடத்தை விதிகளின்படி தேர்தல் பரப்புரை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே நடைபெற வேண்டும்.

- தேர்தல் பரப்புரையின் போது பிளாஸ்டிக் பேனர்கள், கொடிகள் மற்றும் தோரணங்கள் உபயோகப்படுத்தக்கூடாது.